அக்கரைப்பற்று மாநகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2(v),(vi) மற்றும் (viii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டுக்கான முத்திரைக்கட்டணம் தொடர்பிலான தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் வரைக்கும் காணி மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தினால் இற்றைப்படுத்தப்படாமையினால் நிதியாண்டுக்குரிய முத்திரைக் கட்டணத்தின் பெறுமதியினை கணிப்பீடு செய்யமுடியவில்லை.	மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் முழுமையாக கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபைக்குச் சொந்தமான 24 காணி கட்டிடங்கள் மற்றும் 60 மோட்டார் வாகனங்களின் பெறுமதிகளை மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	இவ்வருடம் சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள்,மோட்டார் வாகனங்கள், மற்றும் இழுவைப் பெட்டிகளின் பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இவ்வருட நிதிக்கூற்றுக்களில் அவற்றின் மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதிகளை வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மிக விரைவாக மீள்மதிப்பீடு செய்து உண்மைப் பெறுமதிகளை நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(இ)	உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இணைய வலையமைப்பு உபகரணங்கள் மற்றும் 303 புத்தகங்களின் கூட்டு மொத்தம் ரூபா 639,032 மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	நடப்பாண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.	நன்கொடையாக கிடைக்கப்பெறும் பொருட்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்த 765 புத்தகங்களின் பெறுமதிகள் கணிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்ளின் கிரயத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	பதிவழிப்பு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்க ளிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252			
(i) 155 பிரிவு	மாநகர சபைக்குச் சொந்தமான கடையறைகளுக்காக அறவிடப்படும் வாடகைத் தொகையினை மீள மதிப்பீடு செய்து பொருத்தமான தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நவீன பொதுச் சந்தை, வணிக வளாகம் மற்றும் பஸ் தரிப்பு நிலையத்தில் காணப்படும் கடை அறைகளுக்கு வாடகைகளை மீள் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் செயற்பாடுகள் நிறைவுற்றதன் பின்னர் வாடகைகளை மீளமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், கடைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) 247(ஈ) பிரிவு	மாநகர சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளினை இனங்கண்டு அவற்றிற்கு பொருத்தமான ஆதனவரி தொகையினை அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பில் விலை மதிப்பீடுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி கணிக்கப்பட்டு அதன் அடிப்படையில் 10% ஆதனவரி அறவீடு செய்யப்படுகின்றது. ஆண்டுப்பெறுமதி மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கான கோரிக்கை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் செயற்பாடுகள் நிறைவுற்றதும், ஆதனவரியினை மீளமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி செய்யப்படாத அனைத்துக் காணிகளை இனங்காண்பதற்கும், அவற்றின் ஆண்டுப் பெறுமதியினை விலை மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து பெற்று உரிய வகையில் ஆதனவரி அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii) 252 பிரிவு	ஆதனவரியினை செலுத்தாத ஆதன உரிமையாளர்களுக்கெதிராக எழுத்திலான அறிவித்தலொன்றினை விடுத்து ரூபா 74,096,948 அறவிட வேண்டிய பணத்தை அறவிட ஆதனத்தை தடை செய்து கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆதன வரி செலுத்தாத வரி இறுப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வரிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடைமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு	ஆதனவரி அறவிடுவதற்காக மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் அசையாத ஆதனங்களுக்கு மீள் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் அவர்களின் செயற்பாடுகள் நிறைவுற்றதும், மீளமைக்கப்பட்ட ஆதன வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை	சட்டத்தின் பிரகாரம், அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும

		மேற்கொள்ளப்படும்.	
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு	மாநகர சபையின் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	நிதி சார்பான செயலாற்றுகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுட ன், மேலும் மாநகர சபைக்கான செயலாற்றுகை மதிப்பீடுகளை நடப்பாண்டிற்காக தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்க ளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம், செயலாற்றுகை தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1),(2),(3)	மாநகர சபையின் வைப்பு கணக்கில் காணப்படும் ரூபா 1,743,656 இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களை உரியவர்களுக்கு திருப்பி கொடுப்பதற்கு அல்லது வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மீளச்செலுத்தக் கூடிய வைப்புக்கள் இனங் காணப்பட்டு உரியவர்களுக்கு செலுத்தப்புடுள்ளதுடன் சில வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும், ஏனையவற்றினையும் மீளச் செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நடப்பாண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை மிக விரைவாக எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 13,545,820 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 32,126,681 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	21,700,000	82,674,428	8,391,499	74,282,928	18,253,530	74,851,791	7,475,946	67,375,845
(ii)	வாடகை	35,555,148	44,354,295	19,011,063	25,343,232	31,837,148	41,007,058	17,768,544	23,238,514
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	7,250,000	3,492,385	3,492,385	-	10,200,000	4,046,200	4,034,000	12,200
(iv)	ஏனைய வருமானம்	46,675,000	32,760,993	20,779,017	11,981,976	44,015,000	47,158,170	47,158,170	-
(v)	கூட்டுத் தொகை	111,180,148	163,282,102	51,673,964	111,608,136	104,305,679	167,063,220	76,436,660	90,626,560

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டிற்காக ஆதனவரி வருமானமாக ரூபா 18,500,000 பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அப் பாதீட்டில் 16.5 சதவீதமான ரூபா 3,045,539 மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் பாதீட்டில் 83.5 சதவீதமான வருமானம் ரூபா 15,454,461 அறவிடப்படாமல் நிலுவையாக காணப்பட்டிருந்தது.	வருமான பரிசோதகர்கள் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாகவே காணப்படுவதால் வருமானங்களை அறவிடுவதில் பாரிய பின்னடைவுகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளதுடன். எதிர்காலத்தில் நடுக்கட்டு உத்தியோகத்தர்களை நியமித்து ஆதன வரி நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நடுக்கட்டு உத்தியோகத்தர்களை நியமித்து அறவிட வேண்டிய நிலுவை ஆதன வரி வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	223 வாடகை தாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 14,148,126 ஆனது 2012 தொடக்கம் மீளாய்வாண்டு வரை அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது வாடகை நிலுவை அறவீடு செய்வதற்கான அறிவுறுத்தல் கடிதங்கள், சட்டத்தரணிகள் ஊடாக, இணக்க சபையுடனான நடவடிக்கை, மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், மீதமுள்ள அடையாளம்	அறவிட வேண்டிய வாடகை வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

		காணமுடியாத நிலுவைகளை எதிர்காலத்தில் பதிவளிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.	
(இ)	சபையின் சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியதன் பேரில் மீளாய்வாண்டின் இறுதி வரை பெறவேண்டிய ரூபா 9,921,530 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	1992ம் ஆண்டு முதல் 2011 ம் ஆண்டு வரையான நிலுவைகள் பிரதேச சபையின் நிதிக்கணக்குகளினூடாக அக்கரைப்பற்று மாநகர சபைக்கு பாரதீனப்படுத்தப்பட்டிருந்தது இதனால் அவ்வருமதிகள் தொடர்பான போதிய தகவல்கள் இன்மையினால் அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	காணிக் கொடுக்கல் வாங்கல் மீதான முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்தும், சபையினால் ஜனவரி - திசெம்பர் 2024 வரையான மாதங்களுக்கான முத்திரைக் கட்டணங்கள் உரிய காலப்பகுதிகளில் கோரிப் பெற்றுக்கொள்வதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆண்டுக்கான முத்திரைக்கட்டணம் 2025 ஏப்ரல் மாதம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன். 2024 ஆம் ஆண்டுக்கான முத்திரைக்கட்டணம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கு மாத்திரம் ஆவணங்கள் வழங்கப்பட்டு அவை இறைவரித்திணைக்களத்திற்கு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	முத்திரைக் கட்டணம் உரிய காலத்தில் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையினால் பயன்படுத்தப்படும் 06 வாகனங்களுக்கு 30/2016 ஆம் இலக்கமும் 2016 திசெம்பர் 29 ஆந் திகதியும் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 3.1 இன் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளாததால், குறித்த	மாநகர சபையின் அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ளும் பொருட்டு கிழக்குமாகாண இயந்திரப்	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து வாகனங்களுக்கும் கட்டாயம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படல்

	வாகனங்களுக்கான எரிபொருளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,678,035 உண்மையான வாகன ஓட்டத்தினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	பொறியிலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், உரியகாலத்தில் பூர்த்திசெய்ய முடியவில்லை. தற்போது இவற்றுக்கான எரிபொருள் பரிசோதனையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	வேண்டும்.
(ஆ)	கொள்வனவு செய்யப்படும் டயர்கள் மாற்றீடு செய்யப்படும் போது ஏற்கனவே குறித்த வாகனத்திற்கு பயன்படுத்தப்பட்ட டயர்கள் பாவித்த கிலோ மீற்றர் அளவு, மாற்றீடு செய்யப்படும் டயர்கள் பாவிக்க எதிர்பார்க்கும் கிலோ மீற்றர் அளவினை பதிந்து பொறுப்பேற்றல் மற்றும் கையளித்தல் இடம்பெறாமையினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் டயர்களின் உண்மையான கிலோ மீற்றர் ஓட்டத்தினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	கொள்வனவு செய்யப்பட்டு மாற்றீடு செய்யப்படும் டயர்கள் தொடர்பான தகவல்கள் வாகன பதிவுப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டு வருவதுடன் தங்களால் தெரிவிக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கப்படும் வகையில் பதிவுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மாற்றீடு செய்கின்ற போது ஒவ்வொரு வாகனங்களுக்கும் விபரமான அறிக்கைகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2011 ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் ஊழியரொருவருக்கும் மற்றும் சனசமூக நிலையமொன்றிற்கும் வழங்கப்பட்டதாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டு வரும் ரூபா 106,003 ஆன 02 முற்பணங்களினை 13 வருடங்களாக அறவிடுவதற்கு செய்வதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அக்கரைப்பற்று பிரதேச சபையில் இருந்து அக்கரைப்பற்று மாநகர சபை பிரிக்கப்படும் போது முற்பணங்களுக்கான ஆவணங்கள் வழங்கப்படாமல் மீதிகளாகவே மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தது இதனால் இவற்றை பதிவளிப்பதற்குரிய நடவடிக்கையாக ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது	முற்பணமாக வழங்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி மற்றும் 1980 ஆம் ஆண்டின் நம்பிக்கை நிதி சட்டத்தின் பிரகாரம், நிதியத்திற்கான பங்களிப்பானது ஒவ்வொரு மாதத்திலும் செலுத்தவேண்டியிருந்த போதிலும், ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட ரூபா 285,600 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ரூபா 26,930 ஊழியர் நம்பிக்கை நிதி செலுத்தப்படாமல் மீளாய்வாண்டு இறுதி வரை மீளளிக்கத்தக்க	குறித்த ஊழியர் சேமாலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புத் தொகைகள் உரிய நிறுவனத்திற்கு நடப்பாண்டில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது	சட்டத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய நிலுவைகளின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தி உரிய அனுமதியுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வைப்பாக பேணப்பட்டு வருவதுடன் அத்தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(உ)	உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற இலத்திரனியல் விளம்பர தொலைக்காட்சி மூலம் ஆண்டுதோறும் அண்ணளவாக ரூபா 350,000 வருமானம் கிடைத்திருந்தும், 2019 ஆம் ஆண்டில் பழுதடைந்த இவ் விளம்பர தொலைக்காட்சியினை மீளாய்வாண்டின் இறுதிவரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கடந்த 06 வருடங்களாக வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	திருத்தும் நிறுவனமானது தலைநகர் கொழும்பிலிருந்தே வருகை தந்து இவ் இலத்திரனியல் தொலைக் காட்சியை திருத்தம் செய்ய வேண்டும். ஆனால் அவர்களிடம் கூறுவிலை கோரியிருந்தும் அவர்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை இருந்த போதிலும் நடப்பாண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இலத்திரனியல் விளம்பர தொலைக்காட்சி நீணட் காலமாக பழுதடைந்து காணப்படுவதனால் காலதாமதமின்றி மிக விரைவாக திருத்தம் செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	ஊழியர்களின் ஓய்வூதிய நிலுவைகளாக மீளாய்வாண்டின் திசெம்பர் மாத இறுதி வரை ரூபா 1,643,139 ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியதும் மற்றும் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடனாக பெறப்பட்ட தொகையில் ரூபா 643,961 செலுத்தப்படாமல் காணப்படுவதும் கலந்துரையாடி அத் தொகையின் உண்மைத் தன்மையினை ஆராய்ந்து குறித்த தொகை செலுத்துவது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஓய்வூதிய நிலுவைகள் தொடர்பில் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபைகளில் போதிய தகல்கள் இல்லாமையினால் நிலுவை தொடர்பில் சரியான தீர்மானத்தினை எடுக்கமுடியவில்லை	இரு சபைகளும் இணைந்து ஓய்வூதிய திணைக்களத்துடன் கலந்துரையாடி இத் தொகை செலுத்துவது தொடரிபில் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்யாமல் 2021 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2023 ஆம் ஆண்டில் வாடகை தொகையில் 10 சதவீத அதிகரிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேச நடைமுறையில் காணப்படும் வாடகை தொகையினை விட குறைவாக மாதாந்தம் ரூபா 2,000 தொடக்கம் ரூபா 5000 வரையிலான வீச்சில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனால் மாநகர சபையின் வருமானம் வருடாந்தம் இழந்து	சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள், காணிகள் மற்றும் கடை அறைகளுக்குரிய வாடகைப் பெறுமதிகளை மீள்மதிப்பீடு மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்தன்	மிக விரைவாக வாடகை மதிப்பீட்டினை மேற்கொண்டு மாநகர சபையின் வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வருவதுடன், சபையின் அனைத்து கடைகளினதும் வாடகைப் பெறுமதியினை தற்கால வாடகைத் தொகைக்கேற்ப தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்பாடுகள் நிறைவுற்றதன் பின்னர் வாடகைகளை மீளமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(ஆ)	மாநகர சபையினால் ஆதனங்களை காலத்துக்கு காலம் மதிப்பீடு செய்வதற்கும், ஆதன உரிமையாளர்களின் தரவுகளை இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், கடந்த ஆண்டில் ரூபா 67,375,845 ஆக காணப்பட்ட நிலுவை இவ்வருட இறுதியில் ரூபா 74,096,948 ஆக அதிகரித்தமை மாநகர சபையின் ஆதனவரி அறவீட்டிலுள்ள வினைத்திறனின்மையினை வெளிப்படுத்துகின்றது.	மீள் மதிப்பீடுகளை மேற் கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அசாதரண நிலமையின் காரணமாக மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அவர்களின் செயற்பாடுகள் நிறைவுற்றதன் பின்னர் ஆதனங்களுக்கு மீளமைக்கப்பட்ட ஆதன வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மிக விரைவாக ஆதனங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கும் முறையாக ஆதன உரிமையாளர்களின் பதிவேடுகளை பேணுவதற்கும் உரிய நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
2011 தொடக்கம் மீளாய்வாண்டு வரை மாநகர சபையின் மீன் சந்தைக் கடை, புதிய சந்தைக் கடை, பஸ் தரிப்பு நிலையக் கடைகள், மாநகர சபை பூங்கா கடைகள் மற்றும் கொள்கலன் கடையறைகள் உட்பட 115 எண்ணிக்கையான கடையறைகள் பயன்பாடின்றி காணப்படுவதுடன், அவற்றினை பொருத்தமான வகையில் அல்லது மக்களின் தேவைக்கேற்ப மாற்றம் செய்து வாடகைக்கு வழங்குவதற்கு மாநகர சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	115 கடை அறைகளையும் பகிரங்க கேள்வி அறிவித்தல் விடுத்தும் இக் கடையறைகளை பெற்றுக்கொள்வதற்கு எந்தொரு வியாபாரியும் முன்வரவில்லை. இதனால் மக்களின் தேவைக்கேற்ப திருத்தம் செய்து வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	உரிய அனுமதியினை பெற்று திருத்தம் செய்வதன் மூலம் அனைத்து கடைகளையும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடு, மற்றும் ஏனைய நிலையான சொத்து பதிவேடு போன்றவற்றில் முழுமையாக பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள் பதிவேட்டில் விபரங்களை உரியமுறையில் பதிவு செய்வதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்	சொத்துக்களின் பெறுமதி உட்பட உரிய பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது.	
(ஆ)	சபைக்கு வெளித்தரப்பினர்களிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்களினை பதிவு செய்வதற்கான நன்கொடைப் பதிவேடு சபையினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைக்கு இதுவரை காலமும் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்கள் தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.	நன்கொடைப் பதிவேட்டில் தயாரித்து நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற பொருட்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நன்கொடைப் பொருட்பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை மாநகர சபையில் காணப்படும் 17 வாகன இயந்திரங்களை திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் திண்மக்கழிவகற்றல் மற்றும் வாகன வாடகை வருமானங்கள் சபைக்கு இழக்கப்பட்டிருந்தன.	பாவிக்க முடியாத உழவு இயந்திரங்கள் மற்றும் பெட்டிகள் போன்றவற்றினை ஏல விற்பனை செய்ய அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சபையினால் தற்போது திருத்தக்கூயெ வாகனங்கள் ஒவ்வொன்றாக திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.	வாகனங்களி னை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவ தற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2022 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து குடிநீரை பெற்றுக்கொள்ள சபையின் வீதிகளை அகழ்ந்தமைக்காக 135 பயனாளர்களிடமிருந்து ரூபா 1,103,273 வைப்பாக பெறப்பட்டிருந்தும், குறிப்பிட்ட வீதிகள் பயனாளர்களினால் மீள் புனரமைப்பதற்கும் அவர்களின் வைப்புத்தொகையினை மீளச் செலுத்துவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நீர் இணைப்பு பெறுவதற்காக வைப்புச் செய்யப்பட்டு மீளப் பெறப்படாமல் காணப்படும் வைப்புப் பணங்களை தற்போது உரியவர்களுக்கு மீள வழங்கப்பட்டு வருவதோடு, மீளப்பெறாதவர்களின் வைப்புப் பணங்களை சபையின் வருமானத்திற்கு மாற்றி செப்பனிடப்படாத வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	வெட்டப்பட்ட வீதிகளினை பாதுகாப்பாக பயணிக்ககூடியவாறு சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் பொருட் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், 2023 ஆம் ஆண்டில் பொருட் கணக்கெடுப்புக் குழுவின் அவதானிப்புக்களையும் சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடப்பாண்டில் பொருட் கணிப்பீட்டுச் சபையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	முந்திய ஆண்டில் கணக்கெடுப்பு சபையின் சிபார்சுகள் முறையாக நடைமுறைப்படுத்தப் பட வேண்டியதுடன், புதிய ஒவ்வொரு ஆண்டினதும் பொருட் கணக்கெடுப்பு அறிக்கையில் உரிய காலத்திற்குள் முடிக்கப்படல் வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்காமல், மாநகர சபையினால் வழங்கல்களும் சாதனங்களும் மற்றும் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தலும் பேணலும் ஆகியவற்றிற்காக ரூபா 31,549,148 செலவிடப்பட்டிருந்தது.	நடப்பாண்டிற்கு தேவைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பூரண பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது.	ஒவ்வொரு வருடமும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பெறுகைச் செயற்பாடுகள் இடம்பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும.

3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
மாநகர சபையில் 5 பதவி நிலை வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் மற்றும் நிதி, நிருவாக மற்றும் சுகாதார தொழிலாளிகள் மற்றும் வேலைத் தொழிலாளிகள் ஆகியோரின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் பொதுச் சுகாதார சேவைகளின் மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் வினைத்திறனற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதிப்பிரதம செயளாளர்(நிருவாகம்) ஆகியோருக்கு குறித்த சில பதவியணிகளின் வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு காலத்திற்குகாலம் மாநகர சபையினால் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.	நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக் கான வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினை உருவாக்கி அதன் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வுக் குழு ஒன்று நடப்பாண்டிற்காக நிறுவப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வுத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.	சபையின் நடவடிக்கைகள் முறையாக உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டு சபையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், செயலாற்றலை உயர்த்துவதற்கும் பரிந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்நிகழ்சித் திட்டத்தை திறம்பட மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டிற்கு பாதீடு தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.	சுற்றறிக்கை யின் பிரகாரம் குறிக்கோள்களை அடையக் கூடிய வகையில் குறிகாட்டிகளை உருவாக்குவதற்கும், பாதீட்டில் நிதி ஒதுக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
மீளாய்வாண்டில் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட 4,005 டொன் கழிவுகள் அட்டாளைச்சேனை திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் கொட்டப்பட்டு ரூபா 1,201,389 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மாநகர சபையினால் கழிவுகளை தரம்பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால், சேகரிக்கப்பட்ட அனைத்து கழிவுகளும் உக்காத கழிவுகளாக கருதப்பட்டு ஒரு டொன் கழிவுக்கு மேலதிகமாக ரூபா 100 செலுத்தப்படுவதுடன் வாகனத்திற்கான எரிபொருள் செலவுகளும் ஏற்பட்டிருந்தது.	மாநகர சபையினால் குப்பைகளை தரம் பிரித்து வழங்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அதற்காக இரண்டு நிறங்களில் பொதிகளும் வழங்கப்பட்டிருந்தும், மக்களின் ஒத்துழைப்பின்மை மற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக குப்பைகளை தரம்பிரித்து பெற்றுக் கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் தரம்பிரித்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கழிவுகளை தரம்பிரித்து பெற்றுக் கொள்வதற்கும், சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்வதற்கும், செலவினங்களை இழிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் திண்மக்கழிவு சேகரிப்பு மத்திய நிலையம் மற்றும் விலங்கறுமனை போன்றன தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்று செயற்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடப்பாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.